செய்தி வெளியீடு எண். 173 நாள். 31.03.2018

**மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் திருவள்ளூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 'முழு சுகாதாரம் தமிழகம் முன்னோடி தமிழகம்' என்ற உறுதிமொழியை வாசித்தும், தூய்மையின் முக்கியத்துவத்தை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்**

இன்று (31.03.2018) மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பகுதியில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி முறை செயல்விளக்கம் வயலினை பார்வையிட்டார். மேலும், தோட்டக்கலை துறையின் கீழ் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் காய்கறி மற்றும் பூக்கள் சாகுபடி திட்டம் குறித்த கருத்தினை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து தூய்மை பாரத இயக்க பணிகளின் ஒரு பாகமாக, திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து கழிவறைகளை உபயோகித்தல் உறுதி செய்தல் தொடர்பாக குத்தம்பாக்கம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தை பார்வையிட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரிக்கும் கொட்டகையையும், மண்புழு உரம் தயாரிக்கும் இடத்தினையும், திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனையில் சுகாதாரப் பணிகளை பார்வையிட்டு மாவட்ட விளையாட்டரங்கத்தில் 'முழு சுகாதாரம் தமிழகம் முன்னோடி தமிழகம்' என்ற உறுதிமொழியை வாசித்தும், தூய்மையின் முக்கியத்துவத்தை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார். இந்நிகழ்வினில் ஆளுநர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஆர்.இராஜகோபால்,இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**